சென்னை - தாம்பரம் - ஆவடி மாநகராட்சிகள் - திருவள்ளூர் - செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டங்களில்

வடகிழக்குப் பருவமழைக்கான பேரிடர் ஆயத்தப் பணிகள்- உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது

சென்னை, செப்.15-

பெருநகர சென்னை மாநகராட்சி, தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகள் மற்றும் திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழைக்கான பேரிடர் ஆயத்த பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் தலைமையில் நேற்று (14.09.2024) தலைமைச் செயலகத்தில் தொடர்புடைய துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களும், ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர்களும் பருவமழையின் சவால்களையும், இதனை திறம்பட எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள பேரிடர் ஆயத்த நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், பல்வேறு துறைகளின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், வடகிழக்குப் பருவமழையினை திறம்பட எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துரைத்தனர்.

சென்னை பெருநகர காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்:

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆவடி மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மண்டல அளவிலான பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும். இதன் மூலம் ஒவ்வொரு அலுவலர்களுக்குமான பேரிடர் மேலாண்மை பணிகள் வரையறுக்கப்பட வேண்டும்.

குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பேரிடர் ஆயத்தம் குறித்த கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

சென்னை வடிநில பகுதியில் நெடுஞ்சாலை, நீர்வளத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, மெட்ரோ ரயில் ஆகிய துறைகளின் மூலம் நடைபெற்று வரும் பணிகளின் தரம் முன்னேற்றம் குறித்து, மாவட்ட மற்றும் மண்டல கண்காணிப்பாளர்களை கொண்டு கள ஆய்வு செய்ய வேண்டும் இந்த பகுதிகளில் நடைப்பெற்று வரும் பேரிடர் தணிப்பு பணிகள் அனைத்தும் 15.10.2024க்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.

வருவாய்த்துறை, காவல் துறை, மீன்வளத்துறையின் அனைத்து முதல் நிலை மீட்பாளர்களின் பட்டியல் சரிபார்க்கப்பட்டு அவர்களை பேரிடர் மீட்பு மற்றும் எச்சரிக்கை பணிகளுக்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பேரிடர் மீட்பு உபகரணங்கள், வாகனங்கள், நீர் இறைப்பான்கள், படகுகள் பருவ மழை தொடங்கும் முன்னரே பாதிப்புகளுக்கு உள்ளாகும் தாழ்வான பகுதிகளில் நிலை நிறுத்தப்பட வேண்டும்.

பருவ மழை தொடங்கும் முன்னரே மாநிலத்தின் அதிக பாதிப்புகளுக்குள்ளாகும் பகுதிகளில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை நிலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து வானிலை வல்லுநர்கள் மற்றும் ஆர்வலர்களின் முன்னெச்சரிக்கைகளின் அடிப்படையில், பொதுமக்களுக்கு எளிதில் புரியும் வகையிலான, பகுதிவாரியான வானிலை தகவல்கள் வழங்க நடடிவக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு துறை செயலாளர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள், காவல்துறைத் தலைவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையர்கள், உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!

நாம் நாற்பது கோடி மக்கள். ஆனால் நாலாயிரம் சாதிகளாகப் பிளவுபட்டுப் பாழானோம். 'உன் சாதி பெரியது; என் சாதி உயர்ந்தது. நீ மட்டம்; நீ தாழ்ந்த சாதி' என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதைச் சாதகமாக்கிக் கொண்டான் அன்னியன். பாழான சாதிபேதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில் நாடு உருப்படாது. வீணான சாதி பேதத்தாலேதான் நம் நாடு வெள்ளைக்காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டு இருந்தது. தமிழர்கள் சாதிபேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும். 'ஒன்றே குலம். ஒருவனே தேவன்' என்னும் ஒற்றுமை நமக்குள் வேண்டும்; வகுப்பு வாதம் கூடாது.

-அண்ணா

களக்காடி எல்லப்பன் தலைமை!எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

ஜாபர்கான் பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை,செப்,15,

சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்139. வது வட்டம் ஜாபர்கான் பேட்டை, கங்கையம்மன் கோவில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு சைதை மேற்கு பகுதிச் செயலாளர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம் கிருஷ்ண மூர்த்தி முன்னிலையில் இன்று (15.9.2024 ஞாயிறு) காலை 6.30 மணிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிர மணியன் அவர்கள் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இதில் சைதை மா.அன்பரசன்,வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், சைதை சம்பத், வி.பி. ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதம், சைதை சாதிக்,என்.மணிகண்டன், ஆர். கிருஷ்ண குமார், எம்.எஸ்.ஹரி பாபு, அட்கோ கமலநாதன், சை.மு.சேகர்,ஜி.கே.ராமசந்திரன்,வீ.மதிவாணன், மு.கதிரவன்,பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம்,அ. அயோத்பாஷா, சைதை சந்திரன், சி.டி.காசிநாதன், து. முரளி, அ.சுப்பிரமணி,வி. சபரி,சைதை த.மணி,ஜிம்.பாபு, சைதை திலிப்பன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில்

திருவொற்றியூர் கிழக்கில் அண்ணா பிறந்த நாள் - பவள விழா!

மாதவரம் எஸ்.சுதர்சனம் – கலாநிதி வீராசாமி – கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, செப்.15-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் பவள விழா திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் இன்று (15.9.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவுலகத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கழக கொடி ஏற்றி பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் அறுசுவை உணவு மற்றும் இனிப்பு அனைத்து இடங்களிலும் வழங்குகி ன்றனர்

மேலும் இந்த நிகழ்ச்சி யில் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள், பாக முகவர்கள், மாவட்ட, பகுதி, அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாள ர்கள், கழக த்தின் முன்னோ டி கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ- ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை - கார்த்திகா பாஸ்கர் பங்கேற்பு!

தியாகராயர்நகர் 132 அ வட்டத்தில் முப்பெரும் விழா!

வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா வேண்டுகோள்

சென்னை, செப். 15 -

132 அ வட்டச் செயலா ளர் கே.எஸ்.வெல்டிங் ராஜா விடுத்துள்ள வேண்டு கோள் வருமாறு:-

தியாகராயர்நகர் மேற்கு பகுதி 132 'அ' வட்டத்தில் 75ம் ஆண்டு பவளவிழா. முப்பெரும் விழாவை முன்னிட்டு அனைத்து இட ங்களிலும் புதுப்பித்த கழகக் கொடி யேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சியில் மாவட்ட செய லாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தமிழச்சி தங்கபாண்டி யன் எம்.பி., பகுதி கழக செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மாமன்ற உறுப்பினர் பா. கார்த்திகா பாஸ்கர் பங்கேற்கின்றனர்.

இன்று (15-09-2024 ஞாயிறு) காலை 10 மணியளவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது ஆணைக்கிணங்க வட்டக் கழக செயலாளர் கே எஸ் வெல்டிங் ராஜா தலை மையில் மாவட்ட கழக செய லாளர் மயிலை த.வேலு, சட்ட மன்ற உறுப்பினர் ஜெ கருணாநிதி, மேற்கு பகுதி செயலாளர் கே ஏழுமலை.எம்.சி.. கார்த்திகா பாஸ்கர் எம்.சி. ஆகியோர் 132 அ வட்ட த்திற்கு உட்ப ட்ட அனைத்து இடங்களிலும் புதுப்பிக்கப்பட்ட மற்றும் புதிய நமது கழகத்தின் கொடி கம்பங்க ளில் கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு நலதிட்ட உதவிகள் அறுசுவை உணவு மற்றும் இனிப்பு அனைத்து இடங்களிலும் வழங்குகி ன்றனர்

மேலும் இந்த நிகழ்ச்சி யில் நமது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள், பாக முகவர்கள், மாவட்ட, பகுதி, அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாள ர்கள், கழக த்தின் முன்னோ டி கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

எழும்பூர் வடக்கு பகுதியில் 100 இடங்களில் கழக கொடியேற்றல் !

பகுதிச் செயலாளர் சொ.வேலு வேண்டுகோள்

சென்னை செப்:15

எழும்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் சொ.வேலு விடுதுள்ள வேண்டுகோள் வருமாறு;

கழக தலைவர் ஆனைக்கிணங்க சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி. கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படி கழக முப்பெரும் விழா,கழக பவள விழாவை முன்னிட்டு எழும்பூர் வடக்கு பகுதியில் உள்ள 6 வட்டங்களுக்கு உட்பட்ட 100 இடங்களில் இன்று (15.9.2024 ஞாயிறு கழக கொடி கம்பங்கள் ஏற்றும் விழா நடைபெறுகிறது.

கழக கொடி ஏற்றுப வர்கள் கழக மூத்த உறுப்பி னர்கள் மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், எஸ்.மணிமுடி, எம்.ஆர். வெங்க டேசன், கோ. மணி, பெ.ஏழுமலை ஆகியோர்.

எனவே சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணி களின் நிர்வா கிகள்,செயற்குழு உறுப்பினர்கள், பகமுகவர்கள், BLC உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் சொ.வேலு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

மயிலை 124 அ வட்டத்தில் கொடியேற்று விழா!

வட்டப் பொறுப்பாளர் மா.பா.அன்பு அறிக்கை!

சென்னை, செப் 15-

124அ வட்ட தி.மு.க. சார்பில் கழகத்தின் 75ஆம் ஆண்டு பவள விழா வட்டம்தோறும் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் தொடக்க விழா இன்று 15-09-2024 ஞாயிற்றுகிழமை, வட்ட பொறுப்பாளர் மா. பா.அன்பு ஏற்பாட்டில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சிக்கு என்.அன்பழகன், விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., கு.வீரபத்திரன், மூ.உதயசூரியன், என்.வி.லோகநாதன், என்.வடிவேல், சி.எஸ்.நந்தகுமார், ஜி.கே.கௌதம், கே.கண்ணன், அட்வகேட் ஜோதிகுமார், சே.விவேக்ராஜன்ஆ கியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம்கி. மதி ஆகியோர் கழக கொடி யேற்றி பொற்கிழி வழங்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு மா.பா.அன்பு கேட்டுக்கொண்டுள்ளார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாள்!

24வது வட்டத்தில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் அறிக்கை!

சென்னை, செப்.15-

மாதவரம் தெற்குப் பகுதி, 24வது வட்டக் கழகத்தின ருக்கு வட்டச் செயலாளர் கே.பி. சுந்தரேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (15.9.2024, ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணி அளவில் புழல் ஜி.என்.டி. சாலை கேம்ப் அருகில் கழக கொடி கம்பத்தில் கொடியேற்றி அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்க உள்ளதால் கழகத் தோழர்கள், வட்ட கழக நிர்வாகிகள், முன்னாள் நிர்வாகிகள், இளைஞரணி தோழர்கள், பாக முகவர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்துகொண்டு அண்ணா அவர்களுக்கு பெருமை சேர்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: நமது கழகம் தொடங்கி 75வது ஆண்டு பவள விழா என்பதால் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்கவும், மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் ஜி.துக்காராம் அறிவுறுத்தலின்படி ஒவ்வொருவரும் நம்முடைய கழகக்கொடியை இல்லங்களில் ஏற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

கழகத் தோழர்களுக்கு இரு வண்ணக் கழக கொடி தேவைப்பட்டால் ஜி.என்.டி. சாலையில் உள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

23 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

மகன்

வேல்.உமாகாந்த் துணைச் செயலாளர், மாநில பொறியாளர் அணி

131-வது வட்டத்தில் அண்ணா சிலைக்கு மாலை!

மு.ம.செந்தில்குமார் தலைமை! ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. அணிவிக்கிறார்!

சென்னை, செப்.15-

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்டத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் துவக்கப்பட்டு, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டு, கழகதலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் கட்டி காத்து வரும் திராவிட முன்னேற்ற கழகத்தின் பவள விழா மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தலைமையில், பகுதி அவைத்த லைவர் மு.மணிவண்ணன், வட்ட அவைத்தலைவர் வை.தமிழ்செல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் உறுப்பினர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. மாம்பலம் ஆ.சந்திரசேகர், மாமன்ற உறுப்பினர் திருமதி. கோமதிமணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு இன்று (15. 09.2024) 10வது அவின்யுவில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடி ஏற்றுகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட செயலாளர் மு.ம.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை - ராஜா அன்பழகன் பங்கேற்பு

141 வது வட்டத்தில் முப்பெரும் விழா! கொடியேற்றி உணவு வழங்கல்!

வட்டச் செயலாளர் என்.துரை அறிக்கை

சென்னை, செப். 15 -

பேரறிஞர் அண்ணா அவர்களின் 116ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு வருகின்ற ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் தியாகராய நகர் கிழக்கு பகுதி 141 வது வட்ட கழக செயலாளர் என்.துரை அவர்கள் தலைமையில் தியகராயர் நகர் காமராஜர் காலனியில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து, கழக கொடி ஏற்றி, இனிப்பு மற்றும் அறுசுவை உணவு ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ ,. வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து அன்னை அஞ்சுகம் மகளிர் மன்றம் திறந்து வைத்து மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, தியகராயர் நகர் முத்துராங்கன் சாலையில் அமைந்துள்ள நகர்ப்புற நலவாழ்வு மைய வளாகத்தில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களது தலைமையில் இலவச மருத்துவ ஆலோசனை முகாம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி , 141வது மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ. ஜானகிராமன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும், நடைபெறவிருக்கும் இலவச மருத்துவ ஆலோசனை முகாமில் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொண்டு கழக முன்னோடிகள், பாக முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு சிறப்பிக்க வேண்டி 141 வது வட்ட கழக செயலாளர் என்.துரை கேட்டுக்கொள்கிறார்.

வை. ம. அருள்தாசன் முன்னிலையில் கே.பி. சொக்கலிங்கம், கி.கண்ணன், கே.பவுல் ஏற்பாட்டில்

திருவொற்றியூர் மேற்கு பகுதி 4,5,6, வட்டங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் !

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார்! கே.பி சங்கர் எம். எல்.ஏ பங்கேற்பு!

சென்னை செப் 15 :

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 4,5,6ஆகிய வட்டங்களில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில மீனவர் அணி துணை தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஆகியோரின் முன்னிலையில் வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் அந்தந்த வட்டங்களில் நடைபெற்றது.

வட்டம் 4 11924, நேரம் மாலை 5.00 மணி இடம் ஸ்ரீ விநாயகர் திருமண மண்டபம் வட்ட கழக செயலாளர் கே. பவுல் ஏற்பாட்டிலும்

வட்டம் 5 11924 நேரம் மாலை 6:00 மணி இடம் ஸ்ரீ சாய் திருமண மண்டபம் (அஜாக்ஸ்) வட்ட கழக செயலாளர் கே.பி. சொக்கலிங்கம் எம்.சி ஏற்பாட்டிலும்

வட்டம் 6 11924 நேரம் மாலை 7:00 மணி இடம் வட்ட கழக செயலாளர் கி. கண்ணன் எக்.ஸ் எம்.சி ஆகியோரின் ஏற்பாட்டிலும்

திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி. சங்கர் எம் எல் ஏ திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையேற்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் குறித்தும் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழா குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும், எதிர்காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர்.ராம நாதன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் ரா.முருகேசன் பகுதி கழக துணைச் செயலாளர் யு.எஸ்.குறளரசன், மாவட்ட பிரதிநிதிகள் ந.ராம்குமார், ஜி.தினேஷ், ஆர்.மோகனசுந்தரம், ஆர்.தினேஷ் குமார், எஸ். ஆர்.மலைராஜ், எஸ். கணேஷ் சார்பு அணிகளின் மாவட்ட தலைவர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள்,

மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42 (அ) வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்ட செயலாளர் ச.தமிழ்செல்வன் தலைமையில் நடைபெற்றது. பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், முன்னிலை வகித்தார். கே.தேவதாஸ், கே.சங்கர், த.குமரேசன், வி.எஸ்.டி.பாலாஜி, வீ.செல்வமணி, ஆகியோர் வரவேற்புரையில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ், இர.பொன்இளவரசன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ் குமார், ப.ஆ.சண்முகம், மா.ரூபாசங்கர், பி.கே.மூர்த்தி, இ.முத்துகிருஷ்ணன், கே.கோதண்டன், எஸ்.ஜே.ராமு, கோ.ஹரிராமன், தே.ஜனார்த்தனன், ஜெ.வசந்தகுமார், சீ.கார்த்திக், கு.தமிழ்ச்செல்வன், எம்.விஜயகுமார், தே.கண்ணன், ஆர்.ராஜா, ஜே.மகேஸ்வரி, எம்.கலைவாணி, வி.அருள், எஸ்.அரிஸ்குமார், எம்.சாந்தகுமார், எல்.டி. விக்னேஷ்வரன், பி நாகு, ஆர்.கிரிஜா, எம்.கானமூர்த்தி, என்.திருநாவுக்கரசு, வி.எஸ்.கன்னியப்பன், பா.சேகர், மற்றும் பாக முகவர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மாஸ்டர் தமிழ்ப்பித்தன்

செப்டம்பர் 15 (2001)

கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.